# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

**28.09.2018–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

112. அரசாணை (நிலை) எண் 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்:76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:26.07.2018- ஆகியவற்றில் 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1 நாள்:20/8/2018ல் சொத்துவரி பொது சீராய்வு தொடர்பான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்க்ணட அரசாணைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் கீழ்கண்டுள்ளவாறு சொத்து வரி உயர்வு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கட்டிடப் பயன்பாடு விபரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள்) | 50 சதவீதத்திற்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள் | 100 சதவீதத்திற்கு மிகாமல் |

மேலும் நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள் / சாலைகள் மற்றும் விரிவாக்கம் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரித்து அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதனடிப்படையில் சொத்து வரி சீராய்வு செய்யவும் மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி, வந்தவாசி நகராட்சி பகுதிகளிலுள்ள 75 தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், A, B மற்றும் C ஆகிய மூன்று மண்டலங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்கள் மற்றும் விரிவாக்கம் பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு ஒரு சதுர அடிக்கு கீழ்கண்டுள்ளவாறு அடிப்படை மதிப்பு உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள அடிப்படை மதிப்பு (ரூ. / சதுர அடி) | உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள அடிப்படை மதிப்பு (ரூ. / சதுர அடி) | |
|---|---|---|---|---|---|
| 1 | A | 11 | 2.50 | 3.75 | |
| 2 | B | 9 | 1.75 | 2.65 | |
| 3 | C | 55 | 1.25 | 1.90 | |
| 4 | D | -- | 1.00 | D மண்டலம் நீக்கம் செய்யப்பட்டு C மண்டலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது | |

அரசாணை எண். 73 மற்றும் 76, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி 01.04.2018ம் தேதி முதல் வந்தவாசி நகராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து கட்டிடங்கள் பொது சொத்து வரி சீராய்வு செய்திடவும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சி பகுதியிலுள்ள சாலைகள்/ தெருக்கள் மற்றும் விரிவாக்கம் A, B மற்றும் C என மூன்று மணடலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் அடிப்படை மதிப்பு (Zone Value) நிர்ணயம் செய்யவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

*__அலுவலக குறிப்பு :-__*

1. *அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2018ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதற்கு மிகாமலும் சொத்து வரி உயர்வு செய்திட அனுமதிக்கலாம்.*
2. *வந்தவாசி நகராட்சியில் உள்ள 75, சாலைகள் / தெருக்கள் மற்றும் விரிவாக்கம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு* A, B மற்றும் C என *மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.*
3. *அ) மண்டலம்* A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்கள் மற்றும் விரிவாக்கம் அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.2.50 லிருந்து ரூ.3.75 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

   *ஆ) மண்டலம்* B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்கள் மற்றும் விரிவாக்கம் அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.1.75 லிருந்து ரூ. 2.65 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

*இ) மண்டலம்* C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்கள் மற்றும் விரிவாக்கம் அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.1.25 லிருந்து ரூ. 1.90 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

4. ஏற்கனவே நடைமுறையில் *இருந்துள்ள* D மண்டலத்தில் உள்ள தெருக்கள் D மண்டலத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டு C மண்டலத்துடன்இணைக்கப் பட்டுள்ளது

5. *மேற்கண்டவாறு* A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்கள் மற்றும் விரிவாக்கப்பகுதிகளில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு உயர்வு செய்யப்பட்டுள்ள அடிப்படை மதிப்பின்படி சொத்து வரி நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1212/2018/அ1) **(அனுமதிக்கப்பட்டது)**

**113.** வந்தவாசி நகராட்சியில் துாய்மை இந்திய திட்டம்–திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் வார்டுகளிலிருந்து நுண்ணிய உரக்குடில் வரை குப்பைகள் எடுத்து செல்ல கூடுமான பேட்டரிகள் இயங்கும் வாகனம்–1 எண்ணிக்கை மற்றும் நான்கு சக்கர ஆட்டோ டிப்பர் வாகனம் –2 எண்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.13,00,000/– இலட்சம் செலவினத்தில் கொள்முதல் செய்ய அரசு மான்யம் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 090/2018/இ1 நாள்.20.09.18) **(அனுமதிக்கப்பட்டது)**

**114.** வந்தவாசி நகராட்சியில் நடைபெற உள்ள 9 எண்ணிக்கை பேட்டரி வாகனங்கள் ரூ.16.20 இலட்சம் மதிப்பீட்டில் சப்ளைக்கான டெண்டர் நடைபெற உள்ளதை தொடர்ந்து வந்தவாசி நகராட்சி பணிமேற்பார்வையாளர் (Overseer) அவர்களுக்கு 'இ' டோக்கன் பெறவும், அதற்கான தோராய செலவு ரூ.6000–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1408/2018/இ1 நாள்.06.09.18) **(அனுமதிக்கப்பட்டது)**

**115.** வந்தவாசி நகராட்சிக்கு பாரதபிரதமரின் துாய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 784 தனிநபர் கழிப்பிடங்களும் கட்டிமுடிக்கப்பட்டது. மேலும் இந்நகராட்சி பகுதியில் நலிவடைந்த பிரிவினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நிர்வாக நலன் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் கூடுதலாக 50 எண்ணிக்கை கொண்ட தனிநபர் கழிப்பிடம் நகராட்சியின் பொதுநிதியில் கட்டிக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்குதல்.
2. நிர்வாக நலன் கருதியும், மக்களின் நலன் கருதியும் 50 எண்ணிக்கை கொண்ட தனிநபர் கழிப்பிடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

(ந.க.எண்.090/2018/எச்1) **(அனுமதிக்கப்பட்டது)**

**116.** வந்தவாசி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் **2017–2018**ன் கீழ் ரூ.**16.20** இலட்சம் மதிப்பீட்டில் **9** எண்ணிக்கை மின்கலன்மூலம் இயங்கும் வாகனங்கள் சப்ளைக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் **31.08.2018** தேதிய ''தி இந்து'' வேலூர் பதிப்பில் விளம்பரம் செய்ததற்கான விளம்பரம் கட்டணம் ரூ.**4032/–**க்கான பட்டியல் ADWAVE சென்னை நிறுவனத்திடமிருந்து வரப்பட்டுள்ளது. மேலும் டுநுனு விளக்குகள் சப்ளை விளம்பரக் கட்டணம் ரூ.**7812/–** விளம்பரக் கட்டணம் பில் மற்றும் தொழில்வரி செலுத்தக் கோருதல் அறிவிப்பு விளம்பரக் கட்டணம் ரூ.**3562/–**க்கான பில்வரப்பட்டுள்ளது. மேற்கண்ட விளம்பர கட்டணம் ரூ.**4032/–** மற்றும் ரூ.**7812/–** ரூ.**3562/–**ஐ ADWAVE ADVERTISING PRIVATE LIMITTED CHENNAI–**600017** நிறுவனத்துக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>விபரம்</u>

| | |
|---|---|
| **1.**LED விளக்குகள் சப்ளை விளம்பர கட்டணம் | ரூ.**7812.00** |
| **2.**பேட்டரி வாகனங்கள் சப்ளை விளம்பர கட்டணம் | ரூ.**4032.00** |
| **3.**தொழில்வரி விளம்பரக்கட்டணம் | ரூ.**3562.00** |
| **மொத்தம்** | **ரூ.15,406.00** |

அலுவலககுறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தூய்மை இந்தியா திட்டப்பணி விளம்பரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்ததையும், தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1682/2018/இ1 நாள்.27.09.18) **(அனுமதிக்கப்பட்டது)**

**117.**வந்தவாசி நகராட்சியில் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க **24** வார்டுகளிலும் ''சமுதாய குடிநீர் மையங்கள்'' அமைக்கவும், அதற்கான இயந்திரங்கள் பொருத்தி தருதலுக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் **20.09.2018** தேதிய தினத்தந்தி வேலூர் பதிப்பில் விளம்பரம் செய்ததற்கான விளம்பரக்கட்டணம் ரூ.**12,096/–**க்கான பட்டியல் தினத்தந்தி வேலூர் நிறுவனத்திடமிருந்து வரப்பட்டுள்ளது. (THE DAILY THANTHI-VELLORE BILL NO.VLR1819-0007418 AMOUNT RS 12,096- BILL DATE: 20.09.18) மேற்கண்ட விளம்பரக்கட்டணம் வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. சமுதாய குடிநீர் மையங்கள் அமைத்தல்பணி ஒப்பந்தப்புள்ளி அவசரம் அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்ததையும், தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1683/2018/இ1 நாள்.27.09.18) **(அனுமதிக்கப்பட்டது)**

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்
வந்தவாசி நகராட்சி